

ஸ்ரீ :



ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமத்யை கோதாயை நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருப்பாவை உபந்யாஸ ஆஹ்வாந பத்திரிகை

அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன் துணைவி
மல்லிநாடாண்ட மடமயில் மெல்லியலாள்
ஆயர் குலவேந்தன் ஆகத்தாள் தென் புதுவை
வேயர் பயந்த விளக்கு

பூமிப்பிராட்டியின் திருவவதாரமாய் பெரியாழ்வாரின் குலவிளக்காய் பொறுமையே வடிவெடுத்தவளாய் நம் போன்ற சேதனர்களை உஜ்ஜீவிக்கும் பொருட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்தருளினாள் ஸ்ரீ ஆண்டாள். இப்பிராட்டி நமக்குப் பேருபகாரமாய் இரண்டு திவ்யப் பிரபந்தங்களை அநுக்ரஹித்தருளினாள். இதில் திருப்பாவை லோகப் பிரசித்தி பெற்று, பண்டிதர் - பாமரர் என்று வித்தியாசம் இல்லாமல் அனைவரும் கொண்டாடும்படி அமைந்துள்ளது.

இத்திருப்பாவையின் அர்த்த விசேஷத்தை பகவத் சந்நிதிகளில் ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதத்தில் புகழ் பெற்ற வித்வான்களைக் கொண்டு விரித்துரைப்பது வழக்கம். இதே போன்று பேயாழ்வாரின் அவதார ஸ்தலமான திருமயிலையில் அமைந்திருக்கும் ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தில், ஹேவிளம்பி வருஷம், மார்கழி 1ம் தேதி (**16-12-2017**) சனிக்கிழமை முதல் மேற்படி மாதம் 29ம் தேதி (**13-01-2018**), சனிக்கிழமை வரை **உ.வே. வித்வான் வேளூர் ஈயுண்ணி (கீழ்நீர்குன்றம்) விஜயராகவாசார்யார்** ஸ்வாமியினால் திருப்பாவை உபந்யாசம் செய்யப்பட உள்ளது.

இத்திருப்பாவை உபந்யாசத்தில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு அதன் ரசத்தை அனுபவித்து, திவ்ய தம்பதிகள், ஸ்ரீ ஆண்டாள், ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ஆகியோர்களின் கருணைக்கு இலக்காகும்படி பிரார்த்திக்கிறோம்.

தாஸன்கள் :

**வேதபாராயண சபா**

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர்

P.S. PRINTERS, CHENNAI - 600 004. PHONE : 044 - 42131586